# வெற்றி, திறன் - இவற்றைப் பெற சிங்கப்பூரில் ஒரு புதிய அணுகுமுறை உருவாகலாம்: துணைப்பிரதமர் வோங்

***Tamil Seithi***, June 12, 2023

சிங்கப்பூரின் சமூக இணக்கம் மாற்றங்கண்டு வருகிறது. இந்நிலையில் வெற்றி, திறன் ஆகியவற்றைப் பெற ஒரு புதிய அணுகுமுறை உருவாகலாம் எனத் துணைப் பிரதமர் லாரன்ஸ் வோங் கூறியிருக்கிறார்.

சமூக ஆதரவுக் கட்டமைப்பு, சமூக ஒருமைப்பாட்டு உணர்வு போன்ற இதர முக்கிய மாற்றங்களையும் அவர் சுட்டினார்.

கொள்கை ஆய்வுக் கழகத்தின் 35ஆம் ஆண்டு நிறைவு மாநாட்டில் அவர் அது பற்றி பேசினார்.

வெற்றியை அடைவதற்கான புதிய அணுகுமுறை குறித்து சிங்கப்பூரர்களுடன் நடைபெற்ற கலந்துரையாடல்கள் பற்றி அவர் பகிர்ந்துகொண்டார்.

அடையவிருக்கும் வெற்றியைக் காட்டிலும், அதனை எட்டும் பாதையில் பெறும் மனநிறைவையே

சிங்கப்பூரர்கள் முக்கியமாகக் கருதுவதைத் துணைப் பிரதமர் வோங் சுட்டினார்.

விளையாட்டு, கலை போன்றவற்றில் திறன் படைத்தவர்கள், சில்லறை விற்பனைத் துறையில் சேவையாற்றுவோர் எனப் பல்வேறு பிரிவுகளில் திறன் கொண்டவர்கள் அங்கீகரிக்கப்பட வேண்டும் என்றார் அவர்.

புதுப்பிக்கப்பட்டுள்ள சமூக இணக்கம் மேலும் அனைவரையும் உள்ளடக்கியதாக இருக்கவேண்டும்.

குறிப்பிட்ட சில பாதைகளில் முன்னேற்றம் அடைவோரை மட்டுமே அங்கீகரிப்பதாக இருக்கக்கூடாது என்றும் திரு. வோங் சொன்னார்.